- ஒவ்வோர் ஆண்டும் ஏழையர் நாளன்று ஏழையருக்கான ஏதாவதொரு நலத்திட்டத்தைத் தொடங்கலாம்.
- நம் பங்கின் சூழ்நிலை மற்றும் தேவையின் அடிப்படையில் பல திட்டங்களை நீங்களே உருவாக்கிக்கொள்ளலாம்.

தேவையில் இருப்போரைத் தேடிச் சென்று உதவிய ஏழையரின் தாய் மரியா நாம் செய்யும் ஏழையர்க்கான அன்புச் செயல்களில் உடனிருப்பாராக!

கிறிஸ்துவின் மனநிலையில்

**+ நசரேன் சூசை**

கோட்டார் ஆயர்

---

**குறிப்பு** : இச்சுற்றுமடல் 08.11.2020 ஞாயிறு அன்று அனைத்து ஆலயங்களிலும் துறவற இல்லங்களிலும் திருப்பலியின்போது வாசிக்கப்பட வேண்டும்.

**Most Rev. Nazarene Soosai Th. D.,D.D.**
Bishop of Kottar

Bishop's House, P.B. No:17,
Asaripallam Road, Nagercoil - 629 001.
Kanniyakumari District, Tamil Nadu, India.

Phone : Off : +91 - 4652-278343, 279152, 279933
: Per : +91 - 4652-278868
Fax : +91 - 4652 - 278570
E-mail : kottardiocese@yahoo.co.in
Website : www.kottardiocese.org

No. C-28 /2020 03.11.2020

# நான்காவது உலக ஏழையர் நாள்

## 15.11.2020

அன்பிற்கினிய இறைமக்களே,

நாம் செல்வராகுமாறு தன்னையே ஏழையாக்கிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அன்பும் அருளும் உங்களோடு இருப்பதாக!

நம் திருத்தந்தை பிரான்சிஸ் இறைஇரக்க ஆண்டின் நிறைவாக 2017ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் பொதுக்காலம் 33ஆம் ஞாயிறை உலக ஏழையர் நாளாகத் திருஅவையில் கொண்டாடப் பணித்தார். அதன்படி, இந்த ஆண்டின் **உலக ஏழையர் நாளை நாம் நவம்பர் 15, ஞாயிறன்று** "ஏழைகளுக்குத் தாராளமாய்க் கொடு" (சீஞா 7:32) எனத் திருத்தந்தை தந்திருக்கும் மையச்சிந்தனையில் சிறப்பிக்கின்றோம்.

"ஏழைகள் எப்போதுமே உங்களோடு இருக்கிறார்கள்" (மத் 26:11) என நம் ஆண்டவர் இயேசு கூறியது எவ்வளவு உண்மை. நாம் வாழும் பின்நவீனக் காலத்தில் வியப்புக்குள்ளாக்கும் வளர்ச்சியும் விரைவான மாற்றங்களும் மனிதர்க்குக் கைகூடிய பிறகும், வறுமையை ஒட்டுமொத்தமாய் உலகிலிருந்து அழிக்க முடியவில்லை என்பதே எதார்த்தம். இன்னும் சொல்லப்போனால் சிலருக்கான வளர்ச்சியும் அதிவேக மாற்றங்களும் அதிக எண்ணிக்கையிலான ஏழையரையே உலகில் உருவாக்கியுள்ளன. இலாபம் ஒன்றையே நோக்கமாகக் கொண்ட சந்தைப் பொருளாதாரமும் மனிதரைவிடப் பொருளை முதன்மைப்படுத்தும் நுகர்வுக் கலாச்சாரமும் வலிமையற்ற ஏழையரைச் சமூக மைய நீரோட்டத்திலிருந்து கழிவுகளாய் விளிம்புக்குத் தள்ளிக்கொண்டே இருக்கின்றன (இறைவா உமக்கே புகழ், எண்.109).

இச்சூழலில்தான் ஏழைகளுக்காகவும் அதேவேளையில் ஏழையாகவும் வாழ அழைக்கப்பட்டுள்ள திருஅவையானது அனைவருக்கும் பொது இல்லமான இந்தப் பூமியில் புறந்தள்ளப்படுகின்ற ஏழையர் சார்பாகக் கரிசனையுடன் கூடிய காலத்திற்கேற்ற பணிகளை முன்னெடுப்பது கட்டாயமாகிறது. தேவையில் இருப்போரில் ஆண்டவர் இயேசுவைச் சந்திப்பதும் அவர்களுக்கு நாம் ஆற்றும் பணிகளில் அவர் வெளிப்பாடுகளைக் காண்பதும் நம் கடனாகிறது.

“ஏழைகளுக்குத் தாராளமாய்க் கொடு” (சீஞா 7:32) என்னும் சீராக் நூலாசிரியரின் அறிவுரை நம் நடுவில் வறுமையில் வாடுவோரைக் கண்முன் நிறுத்துகிறது. அவர்களுக்குத் தேவையானவை எவற்றையும் கொடாமல் அலங்கார வார்த்தைகளால் ஆறுதல் சொல்வது பயனளிக்காது (யாக் 2:15-16). எனவே, கடவுளின் அன்பால் தூண்டப்பட்டவர்களாய் நாம் ஏழைகளுக்குத் தாராளமாய்த் தேவைப்படுவதைக் கொடுப்பதன் வழியாக அவர்களுக்கு அர்ப்பணிக்க இந்த அறிவுரை நம்மைப் பணிக்கிறது. அவர்களுடைய வறுமையைப் போக்குவதன் வழியாக இறைஆசி முழுமையாக நமக்குக் கிடைக்கும் என உறுதி தருகிறது. இருப்பதை வறியவரோடு பகிர்வதன் வழியாக நாமும் தேவைக்கு அதிகமாகச் சேர்ப்பதைத் துறக்கும் பண்பையும் எளிமையாய் வாழ்வதன் மகிழ்வையும் கற்றுக்கொள்கிறோம் (இறைவா உமக்கே புகழ், எண் 222) எனக் கூறுகிறது. இதனால் நாம் மனவருத்தத்தோடோ கட்டாயத்தினாலோ ஏழைகளுக்கு உதவிட வேண்டும் என்பதல்ல; கடவுளிடமிருந்து மிகுதியாகப் பெற்றுக்கொண்டதை முகமலர்ச்சியோடு வறியோருக்குக் கொடுக்கும்போது அவரின் அன்புக்கு உரியவர் ஆகிறோம் (2 கொரி 9:7) என்ற மனநிறைவையும் இந்த அறிவுரை நமக்கு உணர்த்துகிறது.

வறுமையினால் வாடிய வயிற்றோடும் நீர்வழியும் விழிகளோடும் நீட்டிய கரங்களோடும் ஏக்கத்தோடு காத்திருப்போர் ஏராளம். நம்மில் பலரோ வாழ்வில் வீழ்ந்து கிடக்கும் இத்தகு ஏழைகளுக்காய்ப் பொறுப்பேற்க மனமின்றி விலகிச் செல்கிறோம். ஆனால் சிலரே அவர்களைத் தூக்கிவிட உதவிக்கரம் நீட்டுகிறோம். வீழ்ந்திருப்போருக்குப் பொறுப்பேற்கும் பண்புடையோர் (சகோதரர்கள் யாவரும், எண்.79) அவர்கள் வீழ்ச்சிக்குத் தாமும் ஒரு காரணம் என்ற சமூகப் பொறுப்புணர்வோடு உதவிட முன்வருகின்றனர்; இயேசுவின் பாராட்டைப் பெறுகின்றனர். இதையே பவுலடியாரும், “ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக்கொள்ளுங்கள்; இவ்வாறு கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவீர்கள்” (கலா 6:2) என நமக்கு அறிவுரை கூறுகிறார்.

எதிர்பாராது நாம் எதிர்கொள்கின்ற பேரிடர்களின்போது, அதிலும் குறிப்பாகக் கொரோனா பெருந்தொற்று ஊரடங்குக் காலத்தில் நீங்கள் பங்குகள், அன்பியங்கள், திருத்தூதுக் கழகங்கள், இயக்கங்கள், இயன்ற குடும்பங்கள் எனப் பல நிலைகளில் ஏழைகளுக்குத் தாராளமாய் ஏராளமாகப் பொருளுதவி செய்ததை நான் அறிவேன்; உங்களை உளமாரப் பாராட்டுகின்றேன். அதைப் போன்றே கடந்த மூன்று ஆண்டுகளும் உலக ஏழையர் நாளை முன்னிட்டு மறைவட்டங்கள், பங்குகள், அன்பியங்கள், திருத்தூதுக் கழகங்கள் மற்றும் இயக்கங்கள் எனப் பல மட்டங்களில் திட்டமிட்டு வறியோருக்கும் வலுவற்றவர்களுக்கும் மிக்க ஈடுபாட்டோடு உதவி செய்ததையும் நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்; இந்த ஆண்டும் உலக ஏழையர் நாளை முன்னிட்டு உங்களால் இயன்ற உதவிகளை ஏழைகளுக்குச் செய்திட அன்போடு அழைக்கின்றேன்.

**நாம் என்ன செய்யலாம்?**

- மறைமாவட்டம் மற்றும் மறைவட்ட அளவில் திட்டமிட்டு ஏழையர்க்கான சில காலத்திற்கேற்ற செயல்திட்டங்களை முன்னெடுக்கலாம்.
- பங்களவில் வருகின்ற ஆண்டு ஆலயப் பெருவிழாவினை எளிமையாக்கி, பங்கிலுள்ள கைவிடப்பட்ட மூத்த குடிமக்களுக்கு நாளுக்கொருபொழுது உணவு வழங்கலாம். மருத்துவம் பெற வாய்ப்பில்லாத ஏழை நோயாளர் சிலருக்கு மருத்துவ உதவி செய்யலாம். பொருளாதார வசதியின்மையால் உயர்கல்வி தொடர முடியாத ஏழை மாணாக்கர் ஓரிருவருக்குக் கல்வி உதவி வழங்கலாம். இன்னும் பல நம் பங்கின் ஏழைகள் நிலை அறிந்து செய்யலாம்.
- பங்குத் தந்தையோடு பங்கேற்பு அமைப்புகள் இணைந்து திட்டமிட்டு சிறார், முதியோர், மனநலம் குன்றியோர், மாற்றுத்திறனாளிகள் இல்லங்களுக்கு உதவலாம்.
- ஏழைகளுக்கு உதவிடும் தாராள மனம் கொண்டவர்களோடு தொடர் உதவிக்கான தொடர்பினை ஏற்படுத்தலாம்.
- நம் பங்கில் வசதியுள்ள குடும்பங்கள் நம் நடுவில் கைவிடப்பட்டோர், ஆதரவற்றோர் போன்றோரை இனம் கண்டு ஒருவர் வீதம் தொடர்ந்து உதவிடச் செய்யலாம்.